

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 105 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 08 – வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 105: Thiruvalluvar Year - 2054 - Karthigai 08 - Friday 24 November 2023 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (2)

# பண்பாடும் வைராக்கியமும்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7ந் தேதி முதல் டிச.2ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதியுள்ளார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

“இளைஞர்களுக்கு வழி விடுவோம்” என்ற தலைப்பு என் சிந்தனையில் உதித்தமைக்குக் காரணமே, என்னிடம் பற்றும் பாசமும் கொண்டு இளமைப் பருவத்தில் என்னை ஊக்கப்படுத்தியவர்கள், இயக்கப் பணிகளை ஆற்றுவதற்கு எனக்கு வழிவிட்டு – என் பணிகள் கண்டு பாராட்டிய அந்த இன்பமான நிகழ்வுகள்தான் – நெருக்கடி நிலையின்போது தம்பி ஸ்டாலின், ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டு அங்கு நையப் புடைக்கப்பட்டதை விட, அவரை அதற்கு முன்பே இந்த இளம் வயதில் இவ்வளவு கழக ஆர்வமா? – கழகக் கொள்கைகளைக் கலை நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்துவதில் அவ்வளவு அக்கறையா? என்றவியப்புக்குரிய கேள்விகள், சுற்றியிருப்போருக்கு ஸ்டாலின் மீது பற்று பாசத்தை ஏற்படுத்திவிட்டன என்பதே சரியான காரணம் ஆகுமெனலாம்.

ரஷ்யாவில் ஸ்டாலின், தனது தலைவனாக ஏற்றுக் கொண்ட லெனின், அவரது பார்வையில் பட்ட ஒரு பருவ இளைஞனிடம் எப்படிப் பரிவு காட்டினார் என்பதையும் – அந்தப் பரிவையும் தாண்டிக் கொண்டு அவரிடம் ஒரு வைராக்யமும், பண்பும் எப்படித் தலை தூக்குகின்றன என்பதையும் அவர் வாழ்க்கையில் ஒரு சம்பவம் விளக்குகிறது.

நமது அண்ணா அறிவாலயம், பேராசிரியர் நூல் நிலையத்தில் கிடைத்த ருஷ்யா பற்றிய புத்தகமொன்றில் படித்தேன், அதை உனக்கும் சொல்வதில் எனக்கு ஒரு மகிழ்ச்சி!

அந்தப் புத்தகத்தில் உள்ளபடியே அந்த நிகழ்ச்சியை உனக்கு நினைவூட்டுகிறேன்.

“லியோன்கா என்ற இளைஞன் பக்ரா நதியில் நீந்திக் கொண்டிருந்த பொழுது லெனின் ஆற்றங்கரைக்கு வந்தார். அவர் கோர்க்கி கிராமத்துக்குச் சென்று ஓய்வெடுக்க வேண்டும் என்று அவருடைய மருத்துவர் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார்.

**லெனின் லியோன்காவை உற்றுப் பார்த்தார். அவன் சிறுவனாக இருந்தாலும் நல்ல நீச்சல்காரன், தண்ணீரில் மேலேயிருந்து குதிப்பது, குட்டிக் கரணம் போடுவது அவனுக்குக் கை வந்த கலை. மல்லாக்க நீச்சலடிப்பதும், நீரோட்டத்தோடு சேர்ந்தும், அதற்கு எதிராக நீச்சலடிப்பதும் அவனுக்குப் பிடிக்கும். ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு நீச்சலடித்துப் போவதும், உடனே திரும்பி வருவதுமாக அவன் ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்தான்.**

**லியோன்காவும் லெனினைப் பார்த்தான். ஆனால் அவர் யார் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் கோர்க்கி கிராமத்துக்குச் சமீபத்தில்தான் வந்திருந்தான். அந்த ஊரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று லெனினை நினைத்துக் கொண்டான்.**

## கலைஞர் கடிதம்

அவன் தண்ணீரை விட்டு வெளியே வந்த பொழுது லெனின் அவனோடு பேசினார்.

“தண்ணீர் எப்படி இருக்கிறது?”

“தண்ணீரா? ஈரமாக இருக்கிறது” என்று லியோன்கா குறும்பாக பதில் அளித்தான்.

“ஈரமாக இருக்கிறதா?” என்று லெனின் பலமாகச் சிரித்தார். அவருக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது.

விளதீமிர் லெனின் ஆற்றங்கரையில் உட்கார்ந்து முதலில் தண்ணீரையும் பிறகு லியோன்காவையும் பார்த்தார். மறுபடியும் அப்படியே செய்தார். கடைசியில் அவனோடு பேச ஆரம்பித்தார்.

“வேகமாக நீந்துவது யார் என்று பார்ப்போமா?”

“ஓ! தாராளமாக!” என்று லியோன்கா பதில் அளித்தான்.

லியோன்கா நன்றாக நீந்தக் கூடியவன். ஆனால் லெனினும் அவனுக்குச் சளைத்தவரல்ல. என்ன இருந்தாலும் அவர் வோல்கா பிராந்தியத்தைச் சேர்ந்தவராயிற்றே. நீச்சல் அடிக்கும் பொழுது யாராவது லெனினை முந்தி விட்டால் அது அபூர்வமான சாதனையே.

விளதீமிர் இலியீச்சும் லியோன்காவும் போட்டியிட்டு நீந்தினார்கள். ஆனால் லியோன்கா சீக்கிரத்தில் லெனினை முந்தி விட்டான். அவர் சற்று மனத்தாங்கலோடு தான் விடுதிக்குத் திரும்பினார்.

“அவன் என்னைத் தோற்கடித்து விட்டானே! இது நல்ல அறிகுறியல்லவே. எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இருந்த உடல் பலம் போய் விட்டது.”

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் லியோன்கா அன்று முழுவதும் லெனினுடைய மன நிலையைக் கெடுத்து விட்டான். ஆனால் லியோன்காவுக்கு மிகவும் குஷி. அவன் கோர்க்கிக்குத் திரும்பியதும் பக்ராவில் ஒரு பெரிய மனிதரை நீச்சல் போட்டியில் தோற்கடித்ததை எல்லோரிடமும் சொன்னான்.

“அவர் யார்?” என்று அவனுடைய நண்பர்கள் அவனைக் கேட்டார்கள்.

“அதிகமான உயரமில்லை. நடுத்தரம்”

“தாடி வைத்திருந்தாரா?”

“ஆமாம்”

“மீசை வைத்திருந்தாரா?”

“ஆமாம், மீசை வைத்திருந்தார்”

“உயரமான நெற்றியா?”

“ஆமாம்”

“அந்தப் பெரியவர் லெனின்” என்று குழந்தைகள் பலமாகக் கத்தின.


**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்**




சேலத்தில் டிசம்பர் 17-ல் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டையொட்டி கன்னியாகுமரியில் மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்று துவக்கி வைத்தார். (15.11.2023)

---

## மாநகராட்சிகள் – நகராட்சிகள் – பேரூராட்சிகளில்

# ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

**சென்னை, நவ.24–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புடன் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 அடிப்படை வசதி திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்.**

நகர்ப்புர பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது, அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது, கழிவுநீர், கசடு மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு, கழிவு நீர் நிலைகளை புனரமைப்பது மற்றும் பசுமை வெளிகள், பூங்காக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புகளுடன், அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (அம்ரூத் 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்சார்பில் அம்ரூத் 2.0. திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.330.12 கோடி மதிப்பீட்டில் காரைக்குடி, இராஜபாளையம் நகராட்சிகள், வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, தாம்பரம், கடலூர், ஈரோடு, ஆவடி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 24x7 குடிநீர் வழங்கல் முன்னோடித் திட்டங்களை (24x7 water supply system to the selected pilot water zones) செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் காரைக்குடி நகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.33.71 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.452.42 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச் சாக்கடை திட்டத்தை செயல்படுத்தவும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



மேலும், பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.11.07 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 17 பணிகளும், ரூ. 8.94 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 27 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

நாமக்கல் மாவட்டம் மோகனூர் மற்றும் ஈரோடு மாவட்டம் அந்தியூர் பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ.46.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன.

மேலும், பல்வேறு பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.17.49 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 59 பணிகளும், ரூ.27.91 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்களை உருவாக்குவதற்கான 110 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.0.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 பணிகளை செயலாக்க முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்கள், அவற்றின் குடிநீர் தேவையில் தன்னிறைவை பெறவும், கழிவு நீரை பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தவும் அதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் ஏதுவாக அமையும். மேலும், பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்கள், இந்நகர மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் தெரிவித்துள்ளார்.